

தூத்துக்குடியில் உள்ள காமராஜ் கல்லூரியில், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மற்றும் தேசிய சைபர் பாதுகாப்பு ஆய்வு நிறுவனம் (NCSRC) சார்பில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் குறித்த கருத்தரங்கத்தை கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, துவக்கி வைத்து உரையாற்றினார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், NCSRC இயக்குனர் காளிராஜ், கல்லூரி செயலர் சோமசுந்தரம், கல்லூரி முதல்வர் பூங்கொடி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில், ஒன்றிய அரசையும், தமிழ்நாடு ஆளுநரையும் கண்டித்து நடைபெற்ற உண்ணாவிரதத்தில் தி.மு.க.துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு, காட்டாட்சி, தர்பார் ஆட்சி நடத்தும் மோடி, அமித்ஷா கும்பலை வருகிற 2024 நாடாளுமன்ற தேர்தலில் விரட்டியடிப்போம் என்றும் புதிய பிரதமரை தேர்வு செய்யும் இடத்தில் தி.மு.க.இருக்கும் அப்போது நீட் ஒழிக்கப்படும் என்றும் கூறி, பழச்சாறு வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட2 ஆயிரம் பேர் பங்கேற்றனர்!

மத்திய பிரதேசத்தில்

# பா.ஜ.க. ஆட்சியில் ரூ. 2.70 லட்சம் கோடி ஊழல்!

## பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ் !

போபால், ஆக. 22 -

மத்தியப் பிரதேசத்தில் கடந்த 18 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் ரூ. 2 லட்சத்து 70 ஆயிரம் கோடி அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டி அது தொடர்பான பட்டியலையும் வெளி யிட்டுள்ளது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில், சிவராஜ் சிங் சவுகான் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. இந்த ஆண்டு இறுதியில் அங்கு சட்டப்பேரவை தேர்தல் நடக்கிறது. தேர்தல் தேதி அறி விக்கும் முன்னரே பா.ஜ.க. 39 பேர்களைக் கொண்ட தனது முதல் வேட்பா ளர் பட்டியல் வெளியிட்டுவிட்டு, தேர் தல் வேலைகளைத் துவக்கியுள்ளது. இந்நிலையில்தான், கடந்த 18 ஆண்டுகளாக மத்திய பிரதேசத்தில் ரூ. 2 லட்சத்து 70 ஆயிரம் கோடி அளவிற்கு பா.ஜ.க. ஊழல் செய்துள்ளதாக காங்கிரஸ் கட்சி பட்டிய லிட்டுள்ளது.

இதுதொடர்பாக அம் மாநில காங்கிரஸ் தலைவர் கமல்நாத் கூறியிருப்பதாவது: மத்தியப் பிரதேசத்தில் கடந்த 18 ஆண்டுகளில் பாஜக ஆட்சியில் மெகா ஊழல்கள் நடந்துள்ளன. கூகுளில் ‘ஸ்கேம்’ என்று தேடினால், முதல்வர் சிவ ராஜ் சிங் சவுகான் படம் தான் வரும் அளவுக்கு ஊழல் மலிந்துள் ளது. மத்தியப் பிரதேசத்தில் உள்ள சிவ ராஜ் சிங் சவுகான் அரசு, அதன் 18 ஆண்டு கால ஆட்சியில் மோசடிகளில் உலக சாதனை படைத்துள்ளது. பட்டியல் மிக நீளமானது. ஆனால் காங்கிரஸ் கட்சி சில மெகா ஊழல்களை மட்டுமே பட்டியலிட்டுள்ளது. 50 சதவிகித கமிஷன் ராஜ்ஜியம் மாநிலத்தை ‘ஊழல் மாநிலமாக’ மாற்றியுள்ளது. 2018 மற்றும் 2020க்கு இடையில் எனது ஆட்சிதான் நடந்தது. அப்போது, ஊழல் முறைகேடுகளை விசாரிப்பதை விட, மத்திய பிரதேசத்தை முத லீட்டாளர்களின் மையமாக மாற்றுவதில் கவனம் செலுத்தினேன். 2019 மக்க ளவை தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகளின் காரணமாகவும் இரண்டரை மாதங்கள் வீணாகி விட்டது.

ஆனால் ம.பி. பா.ஜ.க. ஆட்சியில் பிரபல வியாபம் ஊழல் (ரூ. 2,000 கோடி), சட்டவிரோத சுரங்கம் (ரூ. 50 ஆயிரம் கோடி), இடெண்டர் ஊழல் (ரூ. 3 ஆயிரம் கோடி), ஆர்.டி.ஓ. ஊழல் (ரூ. 25 ஆயிரம் கோடி), மது பான ஊழல் (ரூ. 86 ஆயிரம் கோடி), மகாகல் லோக் ஊழல் (ரூ. 100 கோடி), மின்சார ஊழல் (ரூ. 94 ஆயிரம் கோடி) உள்பட 254 ஊழல்கள் மூலம் ரூ. 2 லட்சத்து 70 ஆயிரம் கோடி மோசடி நடந்துள்ளது. இவ்வாறு கமல்நாத் கூறியுள்ளார்.

# மணிப்பூருக்கு தீ மூட்டிய பா.ஜ.க.!

## சீத்தாராம் யெச்சூரியிடம் இம்பால் பேராயர் வேதனை !

இம்பால், ஆக. 22 -

பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவர்களே மணிப்பூரில் தீ மூட்டினார்கள் என்று இம்பால் பேராயர் டொமினிக் லுமோன் வேதனையுடன் கூறினார். பேராயர் மாளிகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரியுடனான சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கூறுகையில், “ஒவ்வொரு இனக் குழுவிற்கும் அதன் சொந்த கவலைகளும் அச்சங்களும் உள்ளன. இதையெல்லாம் அரசு பேசித் தீர்க்க வேண்டும். மாறாக ஒன்றிய, மாநில அரசுகளின் அணுகுமுறை மோதலை மூட்டியுள்ளது” என்றார் பேராயர்.

“கலவரத்தில் கத்தோலிக்க திருச் சபைக்கு ஏற்பட்ட இழப்பு கணக்கிட முடி யாதது. மணிப்பூர் மாநிலத்தில் தேவாலயத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் 60,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கின்றனர். தேவாலயங்களுடன் இணைக்கப்பட்ட பல பள்ளிகள் முற்றிலும் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்களின் கல்வி இடைநிறுத்தப் பட்டுள் ளது.

இது தவிர நிதி இழப்பு மற்றும் வேலை இழப்பு. தேவாலயத்தின் சொத்துக்கள் 50 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கப் பிரதி நிதிகள் இன்னும் திரும்பிக் கூட பார்க்கவில்லை” என்று பேராயர் கூறினார்.

மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட முயற்சி மேற்கொள்ளப்படும் என்று யெச்சூரி உறுதியளித்தார். சிபிஎம் திரிபுரா மாநில செயலாளர் ஜிதேந்திர சவுத்ரி, அசாம் மாநில செயலாளர் சுப்ரகாஷ் தாலுக்தார், மத்தியக் குழு உறுப்பினர் தேப்லினா ஹேம்ப்ராம் மற்றும் மணிப்பூர் மாநில செயலாளர் சத்ரிமாயும் சாந்தா ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். பல்வேறு குடிமை அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் சிபிஎம்தலைவர்கள்ஆலோசனை நடத்தினர். மணிப்பூர் மக்களுக்கு பா.ஜ.க. துரோகம் இழைத்து விட்டதாக அந்த அமைப்புகள் கருத்து தெரிவித்தன.

பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகள் கூட்டமும் நடந்தது. இக்கூட்டத்திற்கு சீத்தாராம் யெச்சூரி, சத்ரிமாயும் சாந்தா, முன்னாள் முதல்வர் ஒக்ராம் இபோபி சிங், மாநில காங்கிரஸ் தலைவர் கெய்ஷாம் மேகச்சந்திர சிங் ஆகியோர் தலைமை தாங்கினர்.

எஸ்.பாட்சா, வே.முருகன் ஏற்பாட்டில் சைதை கிழக்குப் பகுதி

# 172 - 172அ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் - எஸ்.குணசேகரன் பங்கேற்பு!

சென்னை, ஆக. 22 -

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப் படி, சைதை கிழக்குப் பகுதி 172 - 172 அ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (23.08.2023 புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு கிண்டி எம்.ஆர்.சி வளாகத்தில் வட்டச் செயலாளர் எஸ்.பாட்சா, மாவட்டப் பிரதிநிதி வே.முருகன் ஆகியோரது ஏற்பாட்டில் வட்ட அவைத் தலைவர் கே.வி.ஜோய் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சைதை கிழக்கு பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன், மாவட்டப் பிரதிநிதிகள் க.உமாபதி, ஜி.யோவான், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், வட்ட கழக நிர்வாகிகள் எஸ்.ஆசிக்அலி, உ.திருவேங்கடம், எல்.பரமன், எ.ஹேமலதா, எம்.பி.சகாதேவன், த.அன்பரசு, என்.கே.வெங்கடேசன், பொன்.அனுமந்தன், ச.அசோக்குமார், த. வெங்கடேசன், எஸ். ராஜேந்திரன், பி.பி.நாகராஜ், தி.வழிவிட்டான், சே. உமா, ஜி.குணசேகர், அ.சக்திவேல், எம்.நாராயணமூர்த்தி, ரா.சீனிவாசன், சி. எச்.பென்சிலய்யா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ் , மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் ஆகியோர் பங்கேற்று முதலமைச்சர் காப்பீடு திட்டத்தின் காப்பீடு அடையாள அட்டை வார்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் வழங்குவது குறித்தும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் விரிவாக ஆலோசனை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

எனவே 172 மற்றும் 172 வது அ” வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், 172 மற்றும் 172 அ” வட்டத்தில் உள்ள பாக முகவர்கள் (PLA2) மற்றும் பாகப் பணியாளர்கள் வட்ட கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு

172 மற்றும் 172அ” வட்ட திமுக சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது



மயிலாடுதுறை மாவட்டக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசு, ஆளுநரைக் கண்டித்து நடை.பெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் கழக கொள்கைப் பரப்பு செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கண்டன உரையாற்றினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் மற்றும் பலர் உள்ளனர்.

‘நீட்’ தேர்வை திரும்பப் பெற வலியுறுத்தி

# திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. சார்பில் அறவழி உண்ணாவிரதப் போராட்டம்!

## ஐ.பி.செந்தில்குமார் துவக்கி வைத்தார்! அமைச்சர்கள் ஐ.பெரியசாமி -அர.சக்கரபாணி கண்டன உரை!

திண்டுக்கல். ஆக. 22 -

ஒன்றிய அரசு நீட் தேர்வை திரும்ப பெற வலியுறுத்தி திண்டுக்கல்லில் கழக மாவட்ட இளைஞரணி மாணவரணி மற்றும் மருத்துவமனை சார்பில் அறவழி உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் மருத்துவ கல்லூரி மாணவர்கள் உட்பட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்தும். அவர்களது உயிரை பறிக்கும் நீட் தேர்வை ஒன்றிய பா.ஜ. அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், ஆதரவாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகம் அருகே மணிக்கூண்டில் நேற்று முன்தினம் கழக மாணவர் அணி. இளைஞர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் மாபெரும் உண்ணாவிர அறப்போராட்டம் நடைபெற்றது. அறப்போராட்டத்தை கிழக்கு மாவட்டசெயலாளரும், பழநி சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ. செந் தில்குமார் துவக்கி வைத்தார். கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சியான காங்கிரஸ், மதிமுக, விடு தலை சிறுத்தைகள் கட்சியினர், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

பின்னர் மாலையில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பழச்சாறுகளை வழங்கி போராட்டத்தை முடித்து வைத்தனர். அமைச்சர் இ. பெரியசாமி பேசுகையில் ஜனநாயகத்தின் குரல் வளையை நெறிக்கும், தமிழ்நாட்டின் உரிமையை பறிக்கும் ஒன்றிய அரசிடம் இருந்து கல்வியில் நமக்குள்ள உரிமையை பெறுகின்ற வரை இந்த நீட் தேர்வை ரத்து செய்கிற வரை முதலமைச்சர் போராடி நிச்சயம் வெற்றியை பெற்று தருவார். இந்த போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும் விரைவில் ரத்து செய்வோம் என்றார். அமைச்சர் அர. சக்கரபாணி பேசும்போது அதிமுகவினர் மாணவர்களை ஏமாற்றினார். நீட் தேர்வு காரணமாக அனிதா தொடங்கி ஜெகதீஸ்வரன் வரை 20 மாணவர்களை நாம் இழந்துள்ளோம். நீட் தேர்வு வழக்கு பெறுவதற்கு தமிழக முதல்வர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தும் வருகிறார் . நீட் தேர்வில் தமிழகத்துக்கு விலக்கு பெறும் வரை நம் அனைவரும் ஒன்றுபட்டு போராடுவோம் என்றார்.

போராட்டத்தில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன்,நத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன் ஹரிஹரசுதன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், தலைமை செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, மாவட்ட துணை செயலாளர் நாகராஜன், பொருளாளர் சத்தியமூர்த்தி ,மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் ஜெயன், மாநகர செயலாளர் ராஜப்பா,திண்டுக்கல் மேயர் இளமதி, , ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, திண்டுக்கல் ஒன்றிய தலைவர் ராஜா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், துணைத் தலைவர் பொன்ராஜ், மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன், மாநகர காங்கிரஸ் தலைவர் துரை. மணி கண்டன் மற்றும் கழக மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் சார் பணி நிர்வாகிகள் பத்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (21.07.2023) திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றின் கருங்கல் கட்டுமான திருப்பணி, அனைத்து உபசன்னதிகள் மற்றும் பிரகாரங்களின் திருப்பணிகளை தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் என்.கே.மூர்த்தி, இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பி.ஏ.சந்திரசேகர ரெட்டி, ப.கோவிந்தசாமி, திருமதி வளர்மதி, பா.சாந்தகுமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தி.மு.க.,வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இந்நிகழ்வுகளில் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், சுப.சரவணன், மிசா ராமநாதன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, கே.ஆர்.என்.போஸ், கீரை, தமிழ் ராஜா, இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், அரு.வீரமணி, க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், ஸ்ரீ தேவி அண்ணாத்துரை, எம்.லியாகத் அலி, ஆ.செந்தில், சு.சண்முகம், த.மணிராஜன் , கே.எஸ்.ச இளையச்சூரியன், கலைச்செல்வன், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் சுதர்சன், டாக்டர் அமானுல்லா, டாக்டர் சதீஷ் மற்றும் மாவட்ட மாநில, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட – கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.